மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 18 திங்கட்கிழமை 04.11.2024 கதிர் 407

# பொதுத்தேர்தல் நவம்பர் 14 நடக்கும் திகதி மாற்றம் கோரிய மனு தள்ளுபடி



**கொழும்பு, நவ. 04**

**நாடாளுமன்றத் தேர்தலை இம்மாதம் 14ஆம் திகதி நடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம், அரசியல்யாப்புக்கு முரணானது என்று உத்தரவிடக்கோரித் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுக்காமல் நிராகரிப்பதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.**

நீதியரசர்களான ப்ரீதிபத்மன் சூரசேன, சிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்ணாண்டோ ஆகிய மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த உத்தரவை இன்று பிறப்பித்தது.

சமூக செயற்பாட்டாளரும் நாம் சிறிலங்கா தேசிய அமைப்பின் இணைப்பாளருமான எச்.எம். பிரியந்த ஹேரத் பொதுத் தேர்தல் திகதி சட்டத்துக்கு உட்பட்டதில்லை என்று உத்தரவிடக் கோரி இந்த அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

பொதுத் தேர்தலுக்கான ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தல் சட்டவிரோதமானது என்று அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த திகதி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், தேர்தல் பணிகள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளது என்றும் சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக மன்றாடியார் நாயகம் மன்று ரைத்தார்.

நீண்ட விசாரணைகளின் பின்னர் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் நிராக ரிப்பதற்கு உயர்நீதிமன்றம் தீர்மானித்தது.

(ஐ)

## கற்றறிந்தோர் வெளியேற்றம் குறைய சரியான சம்பளம் வழங்கப்பட வேண்டும்!

### முன்னாள் எம்.பி. எரான் ஆலோசனை

அரச ஊழியர்களுக்கு சந்தைக்கு ஏற்பட சம்பளம் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் போது மூளைசாலிகள் வெளியேற்றம் நடக்காது. அரச ஊழியர்கள் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுவர் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன(ுசயெ றுைை-மசயஅயசயவநெ) தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கடந்த தேர்தல்களில் கொலை குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களைக் கூட மக்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்திருந்தனர். எனவே, இம்முறை அவ்வாறான தவறான தெரிவுகளுக்குச் செல்வதை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

சந்தைக்கேற்ப அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு! மக்களுக்கு வழங்கப்படும் அறிவுரை ; புழளநசஅெநவெ நுஅிடழலநந ளுயடயசல

இளைஞர், யுவதிகள் மாற்றம் வேண்டும் என சிந்திக்கின்றனர். அதற்கமைய பாரிய எதிர்பார்ப்புக்களுடனேயே அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்திருந்தனர். ஆனால் அந்த எதிர்பார்ப்புக்கள் தற்போது இழக்கப்பட்டுள்ளன.

எதிர்கால சந்ததியினரின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கு அனுபவமும் கல்வியறிவும் உள்ளவர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட வேண்டும். அரச ஊழியர்களுக்கு சந்தைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு வழங்கப்படும்போது மூளைசாலிகள் வெளியேற்றம் நடக்காது. அரச ஊழியர்கள் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுவர். இது குறித்து ஜனாதிபதியும் அரசாங்கமும் கவனம் செலுத்துவது சிறந்தாகும் என குறிப்பிடடுள்ளார்.

## கருணா – பிள்ளையான் கட்சிகளின் ஆதரவாளர்களிடையே கடும் மோதல்!

மட்டக்களப்பு, நவ. 04

மட்டக்களப்பில் விநாயகமூர்த்தி முரளிதரனின் கட்சி வேட்பாளர் மற்றும் ஆதரவாளர்கள் மீது சிவனேசதுரை சந்திரகாந்தன் கட்சி ஆதரவாளர்கள் மேற்கொண்ட தாக்குதலில் 3 பேர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு ஜெயந்திபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் கூறியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருகையில்,

மட்டக்களப்பு ஜெயந்திபுரம் பாடசாலை வீதியில் ஜனநாயக முன்னணி கட்சியான கருணா அம்மானின் கட்சியின் வேட்பாளரின் காரியாலயத்தின் முன்னாள் உள்ள வீதியில் ஆதரவாளர்களுடன் பேசிக் கொண்டிருந்துள்ளார். இந்த நிலையில் அந்த பகுதிக்கு வந்த 6 பேர் கொண்ட பிள்ளையான் கட்சி ஆதரவாளர்கள் அங்குள்ள மதில்களில் ஒட்டப்பட்டிருந்த கருணா அம்மானின் கட்சி வேட்பாளர்களது சுவரொட்டிகளுக்கு மேல் பிள்ளையானின் கட்சி சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

இதன்போது கருணா தரப்பின் வேட்பாளர் சென்று எங்கள் சுவரொட்டிகளுக்கு மேல் சுவரொட்டிகளை ஒட்டவேண்டம் என தெரிவித்த நிலையில் இரு கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே வாய்தர்கம் ஏற்பட்டதையடுத்து பின்னர் கைகலப்பாகமாறியுள்ளது.

இதனையடுத்து கருணா தரப்பின் ஆதரவாளர் படுகாயமடைந்ததையடுத்து பிள்ளையான் கட்சி ஆதரவாளர்கள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளதாக கூறப்படுகிறது. படுகாயமடைந்தவர்களை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஜ-12)

## லிட்ரோ எரிவாயு விலை தொடர்பில் வெளியான தகவல்

கொழும்பு, நவ. 04

லிட்ரோ எரிவாயுவின் விலையில் இம்மாதம் எவ்வித திருத்தமும் செய்யப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையில் இருக்கும் விலையே நவம்பர் மாதமும் தொடரும் என்று அந்த நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி, 12.5 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 3,690 ரூபாவாக காணப்படுகின்றது. 5 கிலோ கிராம் எடைகொண்ட லிட்ரோ எரிவாயுசிலிண்டரின் விலை 1,482 ரூபாவாகும். மேலும், 2.3 கிலோ எடைகொண்ட எரிவாயு சிலிண்டரின் விலை 694 ரூபாவாக காணப்படுகின்றது.

(ஜ)

# மன்னாரில் மாவீரர் துயிலும் இல்ல துப்பரவு பணி ஆரம்பித்து வைப்பு

மன்னார், நவ. 04

மன்னார மாந்தை மேற்கு பிரதேச செயலாளர்பிரிவில்உள்ள ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தின் சிரமதான பணிகள் நேற்று மாலை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி மாவீரர் தினம் நினைவு கூறபடவுள்ள நிலையில், மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் குறித்த சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது மாவீரர்களின் கல்லறைகளுக்கு மலர் தூவி, சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





# கடவுச்சீட்டு பெற காத்திருப்பவர்களுக்கு அமைச்சர் விடுத்துள்ள முக்கிய அறிவிப்பு

கொழும்பு, நவ. 04

இந்த மாதத்தில் அவசர தேவைகளை தவிர கடவுச் சீட்டு பெற வருவதை தவிர்க்குமாறு பொது பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத், நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



விரைவில் வழமையான முறையில் கடவுச்சீட்டுக களை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கடவுச்சீட்டுகளின் கையிருப்பு ஆறு மாதங்க ளுக்கு ஒருமுறை பெறப்படுவதாகவும் அமைச்சர் கூறினார். மொத்தம் 750,000 கடவுச்சீட்டுகள் கோரப்பட் டுள்ளதாகவும், அவை பகுதி பகுதியாக பெறப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, வெளிநாட்டு கடவுச்சீட்டு விலை மனுக்கோரல் மற்றும் ஏகுளு வீசா சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என பொது பாது காப்பு அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதில்இடம்பெற்றுள்ள முறைகேடுகளை கண்டறிய கணக்காய்வு நடத்தப்பட்டு அதன் மூலம் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557



# நாடாளுமன்றத் தேர்தல் 2024









சுயேச்சை குழு – 14 இன் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு அதன் தலைவரும், முதன்மை வேட்பாளருமாகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்றது.
(படங்கள்: யாழ். தீபன்)

# தேசிய மக்கள் சக்தியின் கல்முனை வட்டாரத் தேர்தல் காரியாலயம் திறப்பு












(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை தேசிய மக்கள் சக்தியின் வட்டாரத் தேர்தல் காரியாலயம் திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு தேசிய மக்கள் சக்தியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளரும், இலங்கை ஆசிரியர் சங்க தலைவரும், தேர்தல் வேட்பாளருமான ஆதம்பாவா அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில், கல்முனை தேசிய மக்கள் சக்தியின் வட்டார குழுத்தலைவரும் செயற்பாட்டாளருமான முபாரக் மற்றும் வட்டார குழுச் செயலாளர் முபாரிஸ் தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான சட்டத்தரணி ஆரிப் சம்சுடீன், தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர் ஆசிரியர் சியாத், செயற்பாட்டாளர் பௌஸ் மற்றும் குழுத்தலைவர்கள் தோழர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# எமது முன்னேற்றத்தில் எமது ஆசிரியர்கள்



எனக்கு மட்டுமல்லாது சமுகத்தில் உள்ள அனைவரினதும் முன்னேற்றத்தில் ஆசிரியர்களினுடைய பங்களிப்பு உள்ளது.

“எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்” என்பது எமது மூதாதையர்களின் கருத்து ஆகும். இதற்கு ஏற்றாற் போல் தான் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான செயல் உள்ளது. வெறும்மண்ணாகஉள்ளமாணவனை சிலையாக வடிவமைத்து தருபவர்கள் ஆசிரியர்களே.

ஒவ்வொரு மனிதனுடைய அறிவார்ந்த வளர்ச்சியிலும் ஆசிரியர்களினுடைய அர்ப்பணிப்பானது இலைமறை காயாக உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

பாலர் பாடசாலை தொடக்கம் இன்று வரை எனது முன்னேற்றத்தில் எனது ஆசிரியர்களின் பங்களிப்பானது அளப்பரியதாகும். பாலர் பாடசாலை செல்லும் போது நான் மிகவும் சிறு பிள்ளையாகவும் எனது தயாரிடமிருந்து பெற்றுக் கொண்ட மிக சொற்ப அறிவையும் மாத்திரமே கொண்டிருந்தேன்.

ஆனால் இன்று தமிழ், ஆங்கிலம்ஆகிய மொழிகளை வாசிக்கவும் எழுதவும் என்னை வளப்படுத்தியவர்கள் எனது ஆசிரியர்களே ஆவர்.

அதுமட்டுமல்ல காலையில்உதிக்கும்சூரியன் இரவினுள்ஒளிரும்நிலவு ஆகியவை தொடர்பாக நான் கதை வழியாக கேட்ட விடயங்களை எல்லாம்விஞ்ஞான ரீதியான விளக்கங்களுடன் புரிய வைத்து அறிவுச்சுடர் ஏற்றியவர்கள் ஆசிரியர்களே. கல்வியில் மட்டுமல்லாது ஆன்மீகம், ஒழுக்கம் போன்ற ஏனைய விடயங்களில் நான் முன்னேற்றமடைவதற்கும் ஆசிரியர்களே அடிப்படை காரணங்களாக உள்ளனர். அத்துடன் சமுகத்தில் ஒரு நல்ல பிரஜையாக நான் வாழ்வதற்கு என்னை வழிப்படுத்தியவர்கள் எனது ஆசிரியர்கள் தான்.

எனவே தான் நான் எனது வாழ்க்கையில் ஒவ்வொரு வெற்றி படிகளை கடக்கின்ற போதும் அதற்காக என் ஆசிரியர்கள் செய்த ஊக்குவிப்புக்களையும் வழிப்படுத்தல்களையும் நினைவு கூற விரும்புகின்றேன்.

ஆசிரியர்கள் எங்களை ஒழுக்கமுள்ளவரகளாகவும் புத்தி ஜீவிகளாகவும் உருவாக்குவதற்கு சில வேளைகளில் கடுமையாக நடத்தியிருக்க கூடும். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் ஆசிரியருடன் நாம் கசப்பான அனுபவத்தை கொண்டிருக்க கூடும். இவை அனைத்தையும் கடந்து வாழ்க்கையில் முன்னேறியவுடன் ஒரு கணம் திரும்பிப் பார்த்தால் நாம் ஏறி வந்த ஒவ்வொரு வெற்றிப் படிகளும் ஆசிரியர்களுடையவழிகாட்டலினாலும் அறிவுறுத்தலினாலும் உருவாகப்பட்டவை என்பது உறுதியான விடயமாகும். பாடசாலைக்கு சென்ற காலம் தொட்டு இன்று வரை என் பெற்றோர் என்னை பற்றி அறியாத விடயங்களை கூட அறிந்து வைத்திருப்பவர்கள் ஆசிரியர்களே. எனக்கு பிடித்த பாடம் எது? என்னிடம் உள்ள திறமைகள் எவை? அவற்றை வளப்படுத்த என்ன செய்ய வேண்டும் என்பதை கூட அறிந்து வைத்துள்ளனர்.

இதன் அடிப்படையில் என்னுடைய எதிர்கால இலட்சியத்தை தேர்ந்தெடுப்பதற்கு கூட ஆசிரியர்களே மூல காரணமாக உள்ளனர். வீட்டில் என்னை பெற்றோர்கள் கவனமாக பார்த்து கொள்வதை போல பாடசாலை சூழலில் என்னை அரவணைத்து காப்பவர்கள் ஆசிரியர்களே. தான் தவறு செய்கின்ற போது கண்டித்தும் நல்லவற்றை செய்யும் போது என்னை பாராட்டி ஊக்குவிப்பவர்களாக ஆசிரியர்கள் காணப்படுகின்றனர்.

எனவே தான் என்னுடைய முன்னேற்றப் பாதையில் வரக்கூடியவற்றை நல்லனவற்றையும் தீயனவற்றையும்பிரித்தறிந்துபயணிக்ககூடியதாக உள்ளது. எனக்கு மட்டுமல்லாது சமுகத்தில் உள்ள அனைவரினதும் முன்னேற்றத்தில் ஆசிரியர்களினுடைய பங்களிப்பு உள்ளது. ஆசிரியர்கள் கடமைகளை சரியாக செய்யும் பொழுது தான் தனி மனித மற்றும் சமூக முன்னேற்றம் என்பவை ஏற்படுகின்றன.


‘எமது மக்களுக்கான எனது பணி மேலும்
உத்வேகமாக தொடர்ந்திட ஆதரவளிப்பீர்’
3
தமிழர் விடுதலை கூட்டணி
வன்னி தேர்தல் தொகுதி
செ.சந்திரகுமார்
(கண்ணன்)
சமூக தொண்டன், தமிழ் விருட்சத்தின் ஸ்தாபகர்
வீடுகள்
நிரந்தர கல் வீடுகள் - 28
வீடு திருத்த உதவிகள் - 15
தற்காலிக வீடுகள் - 10
தற்காலிக வீடுகளுக்கு தகரங்கள் வழங்கி புனரமைத்தமை - 45
கிணறுகள்
பொதுக் கிணறு - 02
குழாய்க் கிணறுகள் - 22
மருத்துவ உதவிகள்
மருத்துவ உதவிகள் இதுவரை - 54
கல்வி
கற்றல் உபகரணங்கள் வழங்கியமை இதுவரை - 18,220
பாடசாலைகளுக்கான கல்வி உதவிகள் இதுவரை- 42
பாடசாலைகளுக்கான பயிற்சி கருத்தரங்கு, வளவாளர் கொடுப்பனவு இதுவரை - 28
துவிச்சக்கர வண்டிகள் மாணவர்கள், பெண் - தலைமைத்துவ பெண்கள் இதுவரை -320
மாதாந்த கல்வி உதவிகள் இதுவரை - 380
அறநெறி பாடசாலை கட்டிடம் - 02
உலர் உணவுப் பொதிகள்
உலர் உணவுப் பொதிகள் இதுவரை - 19,800
கொரானா கால மக்கள் துயர்துடைப்பு
உலர் உணவு பொதிகள் வழங்கியமை- 3800
பொங்கற் பானைகள் இதுவரை - 9100
விளையாட்டு
விளையாட்டு நிகழ்வுக்கான அனுசரணை இதுவரை- 60
விளையாட்டு நிகழ்வுக்கு வீரர்கள் வெளிநாடு செல்வதற்கான அனுசரணை இதுவரை- 10
வாழ்வாதார உதவிகள்
பெண் தலைமைத்துவ குடும்பங்கள், முன்னாள் போராளி இதுவரை - 310
பொது நிகழ்வுகள்
கலாசார நிகழ்வுகளுக்கான அனுசரணை இதுவரை- 78
கோவில் அன்னதானம், இல்லங்களுக்கான மதிய உணவு இதுவரை - 1250
இதை விட வவுனியாவிலுள்ள பெரியார் சிலை விழாக்கள், பண்பாட்டு விழாக்கள், சிரமதானம், இரத்ததான முகாம் மற்றும் சக மதத்தினரின் விழாக்கள், நிகழ்வுகள் போன்றவற்றில் கலந்து கொள்ளலும், அனுசரணை வழங்கலும்.
உங்கள் ‘அன்பு’ எனும் 3 எழுத்தை
‘வாக்கு’ எனும் 3 எழுத்தாக்கி என்னை
‘வெற்றி’ எனும் 3 எழுத்தை
அடைய செய்வீர்கள் என்ற நம்பிக்கையில்
உங்களால் நான்,
உங்களுக்காக நான்
எங்கள் சின்னம்


நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சமூக தொழின் முனைவர், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்
கௌரி
B.Sc, LL.B (Hons) (UK)
4
தமிழர் இருப்பு,
பொருளாதார
அபிவிருத்தி
உங்களில் ஒருத்தி பாராளுமன்றம் நோக்கி
தமிழர் விடுதலைக் கூட்டணி
1 2 3 4 5 6 7 8 9


நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)
கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!
எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!
மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!
அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில்
இளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியமும்
சுற்றுலா விடுதியும்...!
காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

## பேருந்து சாரதிகள் தொடர்பில் பொலிஸார் கடும் நடவடிக்கை

கொழும்பு, நவ. 04

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் பயணிகளின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் இரண்டு பேருந்து சாரதிகளின் சாரதி அனுமதிப்பத்திரத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கம்பஹா - கொழும்பு மற்றும் கொழும்பு - கண்டிக்கு இடையில் இயங்கும் தனியாருக்கு சொந்தமான பேருந்துகள் என கடவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விரு சாரதிகளும் ஒருவரையொருவர் முந்திக் கொண்டு வீதியில் ஆபத்தான முறையில் வாகனத்தை செலுத்தியதால் பயணிகளின் உயிருக்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி கிரில்லவல பிரதேசத்தில் இரண்டு பேருந்துகளையும் பொலிஸார் நிறுத்தி சாரதிகளின் சாரதி அனுமதிப்பத்திரங்களை பொலிஸ் காவலில் எடுத்துக்கொண்டதுடன் சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் அர்ஜுன கொடிகாரவின் பணிப்புரைக்கு அமைய, கடவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ்பரிசோதகர் குமார ஹெட்டியாராச்சி தலைமையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஐ)









## ரணிலுக்கு பதிலடி கொடுத்த தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, நவ. 04

அனுபவம் வாய்ந்தவர்கள் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படாவிட்டால், நாடு கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக பேருந்தைப் போன்று விபத்துக்குள்ளாகும் என்ற முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின கூற்றுக்கு தேசிய மக்கள் சக்தி பதிலளித்துள்ளது.

பதுளையில்நடைபெற்றதேர்தல்பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றிய தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சமந்த வித்யாரத்ன, அனுபவமுள்ளவர்களிடம்நாட்டை ஒப்படைக்க வேண்டும் என்று ரணில் கூறுகிறார்.

இந்தநிலையில் அனுபவம் என்ற வகையிலேயே அவர்களுக்கு நாடு கொடுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

எனினும் 76 வருடங்களாக நாட்டை நொருக்கி திவாலாக்கியுள்ளனர்.

எனவே அனுபவம்வாய்ந்த ஓட்டுனர்களுக்கு மக்கள் ஒருபோதும் அதிகாரம் கொடுக்க மாட்டார்கள் என்றும் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

மாறாக, மக்கள் நட்பு அரசாங்கத்தை அமைப்பதற்கு தேசிய மக்கள் சக்திக்கு மாத்திரமே மக்கள் வாக்களிப்பார்கள் என்று வித்தியாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக கொழும்பில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அனுபவம் வாய்ந்தவர்களை மக்கள் தெரிவு செய்யத் தவறினால் துன்ஹிந்த - பதுளை வீதியில் கவிழ்ந்த பேருந்தைப் போன்று நாடு விபத்துக்குள்ளாகும் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# ஜனாதிபதியின் உருவப்படம் பொறிக்கப்பட்ட 5000 ரூபா நாணயத்தாள்



கொழும்பு, நவ. 04

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின உருவப்படம் பொறிக்கப்பட்ட 5000 ரூபாய் நாணயத்தாள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் இவ்வாறு ஓர் நாணயத்தாள் அச்சிடப்பட்டு வெளியிடப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. சமூக ஊடகங்களில் இவ்வாறான போலி தகவல் பரப்பப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசாங்கம் பெருந்தொகை பணத்தை அச்சிட்டு வெளியிட்டுள்ளதாக சில தரப்பினர் குற்றச்சாட்டுகளை சுமத்தி வரும் பின்னணியில் இந்த 5000 ரூபாய் நாணயத்தாள் தொடர்பான தகவல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் உருவப்படமும் அவரது கையொப்பமும் இடப்பட்ட புதிய நாணயத்தாள் வெளியிடப்பட்டுள்ளதாக சில சமூக ஊடகங்களில் தகவல் பகிரப்பட்டு வருகின்றது.

சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வரும் இந்த நாணயத்தாளானது போலியானது எனவும் இது எடிட் செய்யப்பட்டது எனவும்தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2015 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்ட நாணயத்தாள் ஒன்று இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளதாகவும் அந்த காலத்தில் நாட்டின் நிதி அமைச்சராக ரவி கருணாநாயக்க(சுயளை முயசரயெயெலயமய) செயற்பட்டதுடன் மத்திய வங்கியின் ஆளுநராக அர்ஜூன் மகேந்திரன் கடமையாற்றி இருந்தார்.

சமூக ஊடகங்களில் பகிரப்பட்டுள்ள இந்த நாணயத்தாள் அச்சிடப்பட்ட திகதியாக கடந்த செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் கடந்த செப்டம்பர் மாதம் 23ம் திகதியே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பதவி பிரமாணம் செய்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கையொப்பத்தில் இதுவரையில் நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்படவில்லை என அமைச்சர் விஜித ஹேரத்(ஏதைவாயஉநசயவா)தெரிவித்துள்ளார். (ஐ)









## பதுளை பேருந்து விபத்து பொலிஸார் வெளியிட்ட தகவல்

கொழும்பு, நவ. 04

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு மாணவர்களை ஏற்றிச்சென்ற பேருந்து பதுளை, துன்ஹிந்த பகுதியில் விபத்துக்குள்ளானதற்கு சாரதியே காரணம் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விபத்து ஏற்படுவதற்கு முன்னர் பேருந்தின் பிரேக் செயலிழந்ததாக சாரதி மாணவர்களிடம் கூறியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பிலும் பொலிஸார் கவனம் செலுத்தியுள்ளனர்.

இருப்பினும், பேருந்து சாரதி தற்போது ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருவதால், அவரிடம் வாக்குமூலம் பெறமுடியாத நிலையேற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், விபத்துக்கான காரணம் பிரேக் செயலிழந்ததா அல்லது அதிவேகமாக வாகனம் செலுத்தியதா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பதுளை தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை பேருந்து விபத்து தொடர்பில் பொலிஸார் வெளியிட்ட தகவல்; டீயனரடடய யுஉஉனைநவெ ருளைநசளவைல புசைட னுநயவா

கடந்த 1ஆம் திகதி காலை இடம்பெற்ற இந்த விபத்தில்இரண்டு மாணவிகள்உயிரிழந்துள்ளதுடன் மேலும் 39 மாணவர்கள் காயமடைந்த நிலையில் பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், விபத்தில் காயமடைந்தவர்களின் உயிருக்கு இருந்த ஆபத்து தற்போது மறைந்துவிட்டதாகவும், நேற்றைய நிலவரப்படி அவர்களது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக பதுளை போதனா வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த 10 பேரில் சிலர் நேற்று பொது விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் வைத்தியர் கூறியுள்ளார். இதேவேளை, விபத்தில் உயிரிழந்த இரு மாணவிகளின் மரணத்திற்கு தலை மற்றும் மூளையில் ஏற்பட்ட பலத்த பாதிப்பே காரணம் என தெரியவந்துள்ளது.

நேற்றைய தினம் மகா சங்கரத்தினத்தின் சமய அனுஷ்டானங்களின் பின்னர் ஆயிரக் கணக்கானோரின் கண்ணீருக்கும் மத்தியில் இறுதிக் கிரியைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.11.2024 இல் வெளியிடப்பெற்றது.